<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**<u>OS 65/2014</u>**

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 15.09.2025

Pw2 (கோபால கிருஷ்ணன் )

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை ( 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

என் தாத்தா பெயர் நல்லப்ப கவுண்டர். என் தாத்தாவிற்கு 3 மகன்கள் மற்றும் ஒரு மகள். எங்கள் வீடு, என் சித்தப்பா ரங்கசாமி மற்றும் மற்றொரு சித்தப்ப நாச்சிமுத்து ஆகியோரின் வீடுகள் இணை வீடுகள் என்றால் சரிதான். என் தாத்தாவின் பெண் வாரிசு சின்னம்மாள் எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது. எனது பிறந்த தேதி 30.08.1982. 22.06.1972 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையின் போது நான் பிறக்கவில்லை. எந்த சூழ்நிலையில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் பிரிக்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பிதுராஜித சொத்துக்கள் என்று தாவாவில் குறிப்பிட்டுள்ளேன். நல்லப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என குறிப்பிட்டுள்ளேன். நல்லப்ப கவுண்டரின் வாரிசான சின்னம்மாளுக்கும் சொத்தில் பாகம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1972 பாகப்பிரிவினையில் சின்னம்மாள் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். இன்றைய தேதி வரை சின்னம்மாள் மற்றும் ரங்கசாமி கவுண்டரிடம் எனக்கு பேச்சு வார்த்தை இல்லை என்றால் ரங்கசாமி கவுண்டரிடம் எனக்கு பேச்சு வார்த்தை உள்ளது, சின்னம்மாள் பற்றி எனக்கு தெரியாது. ரங்கசாமி கவுண்டர் இன்றைய தேதியில் படுத்த படுக்கையாக உள்ளார் என்றால் சரிதான். எனக்கும் 4 ம் பிரதிவாதி விஸ்வநாதனுக்கும் முன்விரோதம் உள்ளது என்றால் சரியல்ல. பிதுராஜித சொத்துக்கள் என்பதன் சர்வே எண்கள் சொல்ல முடியுமா என்றால் முடியும். முருங்கத்தொழுவு கிராமத்தில் 1276/4, குப்பிச்சிபாளையம் கிராமத்தில் 135/2 , 135/4 மற்றும் 138/2 மற்றும் முருங்கத்தொழுவு கிராமத்தில் வீடு. வீட்டின் சர்வே எண் தெரியாது. கதவு எண் தெரியும். இன்றைய தேதியில் மேற்படி வீட்டில் யார் குடியிருக்கிறார்கள் என்றால் எங்கள் வீட்டில் நாங்களும், ரங்கசாமியின் வீட்டில் ரங்கசாமியும் குடியிருக்கிறார். நாச்சிமுத்து குப்பிச்சிபாளையம் இடைக்காட்டில் உள்ளார். நான் சொல்லும் வீடுகள் 1972

பாகப்பிரிவினையில் எந்த பகுதியிலும் சொல்லப்படவில்லை என்றால சரிதான். இன்றைய தேதியில் மேற்படி வீடுகளின் பட்டா மற்றும் இதர ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள கந்தாயம் மற்றும் இதர ரசீதுகள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதேபோன்று வீடுகளின் மின்இணைப்பு பஞ்சாயத்து வரி ரசீது மற்றும் வீட்டு வரி மற்றும் இதர ஆவண்ஙகள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. நான் சொல்வதபோல் 2013 ம் ஆண்டு எந்த பைசலும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக பைசல் நடைபெற்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1989 ம் ஆண்டு நான் இளவர் என்றால் சரிதான். சாமியாத்தாளின் திருமணம் மற்றும் இதர செலவுகளை யார் செய்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் அப்பா சொல்லி தான் தெரியும். 1989 ல் நடைபெற்ற வாதியின் ் திருமணத்திற்கு நாங்கள் செல்லவில்லை என்றும் எங்கள் குடும்பத்திற்கும் 1,4 பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் நல்ல உறவு முறை இல்லை என்றால் சரியல்ல. சாமியாத்தாள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மேற்படி குறுக்கு விசாரணையை 1 ம் பிரதிவாதி ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.09.16 03:43:36 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS